The Hindu (English)
Dated: 03-02-2024



Arjun Ram Meghwal

# 'No time limit for panel to submit report on one nation, one election'

**The Hindu Bureau**
NEW DELHI

Union Law Minister Arjun Meghwal on Friday informed the Lok Sabha that no specific time limit had been provided for the high-level committee on simultaneous polls, headed by former President Ram Nath Kovind.

In a written reply, Mr. Meghwal said that the committee on 'one nation, one election' had so far received 35 responses from political parties.

He noted that "no specific time limit" had been provided for the submission of the report by the Kovind panel.

**No deadline**

To a question on whether the committee had set any deadline to consider the suggestions received from various quarters, the Law Minister replied in the negative.

Set up in September last, the high-level committee's mandate was to examine and make recommendations for holding simultaneous elections to the Lok Sabha, State Assemblies, municipalities and panchayats keeping in view the existing constitutional framework.

Meanwhile, in a separate statement, the Law Ministry said that the high-level committee held its fifth meeting, during which a delegation from the Confederation of India Industry called on them.

DAILY THANTHI

Dated: 03.02.2024

# ‘தமிழகம்’ என்ற பெயரை முன்னிலைப்படுத்தி ஏற்கனவே 21 கட்சிகள் தேர்தல் கமிஷனில் பதிவு

புதுடெல்லி, பிப்.3–

நடிகர் விஜய் தொடங்கியுள்ள அரசியல் கட்சிக்கு ‘தமிழக வெற்றி கழகம்’ என பெயர் சூட்டப்பட்டு உள்ளது. இந்த நிலையில் தமிழகம் என்ற சொல்லை முன்னிலைப்படுத்தி, இந்திய தேர்தல் கமிஷனில் ஏற்கனவே 21 கட்சிகள் பதிவு செய்யப்பட்டு உள்ளன. அவற்றின் பெயர்கள் வருமாறு:–

தமிழ் மாநில காங்கிரஸ், தமிழ் மாநில கட்சி, தமிழ் மாநில முற்போக்கு திராவிட கழகம், தமிழ்நாடு இளைஞர் கட்சி, தமிழ்நாடு விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் கட்சி, தமிழ் தெலுங்கு தேசிய கட்சி, தமிழ் தாயக மக்கள் முன்னேற்ற கட்சி, தமிழக மக்கள் திராவிட முன்னேற்ற கழகம், தமிழக மக்கள் முன்னேற்ற கழகம், தமிழக மக்கள் நலக் கட்சி, தமிழக மக்கள் தன்னுரிமை கட்சி, தமிழக ஸ்தாபன காங்கிரஸ், தமிழர் தேசிய முன்னணி, தமிழர் மக்கள் கட்சி, தமிழ்நாடு மகாத்மாகாந்தி மக்கள் கட்சி, தமிழ்நாடு மக்கள் நலவாழ்வு பேரியக்கம், தமிழ்நாடு மக்கள் உரிமை கட்சி, தமிழ்நாடு தெலுங்கு மக்கள் கட்சி, தமிழக முற்போக்கு மக்கள் கட்சி, தமிழக வாழ்வுரிமை கட்சி, தமிழர் தேசம் கட்சி.

மேற்கண்ட இந்த 21 கட்சிகளும் தேர்தல் கமிஷனில் பெயர்களை பதிவு செய்த நிலையில், அங்கீகாரம் பெறாத மாநில கட்சிகளாக விளங்கிவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

There are 21 Parties already registered in ECI highlighting the NAME OF 'Tamizhagam'

DINA MALAR
Dated: 03.02.2024

# போலீஸ் ஒருங்கிணைப்பு அதிகாரிகளுக்கு 9ல் பயிற்சி

சென்னை, பிப். 3–

"தமிழகத்தில் உதவி தேர்தல் அலுவலர்களுக்கு, பயிற்சி வகுப்புகள் நடந்து வருகின்றன. போலீஸ் ஒருங்கிணைப்பு அலுவலர்களுக்கு, 9ம் தேதி டில்லியில் பயிற்சி வகுப்பு நடக்க உள்ளது,'' என, தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹூ கூறினார்.

அவர் கூறியதாவது:

தமிழகத்தில் ஓட்டுப்பதிவு இயந்திரங்கள் தயார் நிலையில் உள்ளன. முதல் கட்ட பரிசோதனை நிறைவடைந்துள்ளது. தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு பயிற்சி முடிக்கப்பட்டுள்ளது. உதவி தேர்தல் அலுவலர்கள், 300 பேருக்கு ஐந்து கட்டமாக பயிற்சி அளிக்கப்படுகிறது. கடைசி கட்ட பயிற்சி, வரும் 9ம் தேதி நிறைவடையும்.

ஒவ்வொரு மாநிலத்திலும், காவல் துறை சார்பில் ஒருங்கிணைப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான பயிற்சி, 9ம் தேதி டில்லியில் நடக்க உள்ளது. தேர்தல் கமிஷன் அங்கீகாரம் பெற்ற கட்சிகளுக்கு, அவர்களுக்குரிய சின்னம் வழங்கப்படும்.

அங்கீகாரம் பெறாத பதிவு பெற்ற அரசியல் கட்சிகள், குறிப்பிட்ட சின்னத்தை பெற விரும்பினால், தேர்தல் கமிஷனுக்கு கடிதம் எழுத வேண்டும். அதை தேர்தல் கமிஷன் பரிசீலித்து முடிவை அறிவிக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

Training for State police Nodal officers will be conducted in Delhi on 9th of February 2024